

10
VIMBAM
10TH INTERNATIONAL
TAMIL SHORT FILM FESTIVAL-2019
13 April 2019 - Trinity Centre, London E12, U.K.
VIMBAM

# SOMA SOLICITORS

34 Eastcote Lane, South Harrow, Middlesex HA2 8DB

COMMISSIONERS FOR OATHS

WE SPECIALISE IN

- **Residential & Commercial Conveyancing**

  உங்களது வீடுகளை வாங்குவதற்கும் அல்லது விற்பதற்கும்.

  உங்களது வியாபார ஸ்தாபனங்களை வாங்குவதற்கும் அல்லது விற்பதற்கும். எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
- **Immigration & Nationality**
- **Family & Matrimonial**
- **Licensing Applications**
- **Landlord & Tenant**

## 020 8423 0203

Mobile: 07919 388 355 Fax: 020 8423 6465

**OPENING TIMES: MON - FRI 9.30am to 5.30pm**


www.somasolicitors.co.uk

email: admin@somasolicitors.co.uk

THE LAW SOCIETY • ACCREDITED

Conveyancing Quality

விம்பத்தின் ஆரம்ப காலத்தில்,
அதன் வளர்ச்சியில் அக்கறை கொண்டவராகவும்
ஆலோசகராகவும் இருந்து
எமக்கு நல்வழிகாட்டிய
அமரர் S.பேரின்பநாதன் அவர்களின்
நினைவுகளோடு...



**10 ஆவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா-2019**

Trinity Centre, London E12, U.K

**13th April 2019**

பன்முக ஆளுமை

## அமரர் கருணா வின்செனற்


(1969 - 2019)



தனக்கென வாழா மனித நேயன்

## அமரர் வைரமுத்து வரதகுமார் (TIC)

(1949 - 2019)



## கண்ணீர் அஞ்சலி

எம் வெற்றுத் தடங்களின்
கொடுந்துயர் ஆற்ற முயன்று
தோற்றுப் போகிறது
உயிரிழந்த காற்று !

**சாவிலேனும் ஓய்வு கொள்**

# பத்தாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா!

2004ஆம் ஆண்டு தொடங்கிய பணி இது. கலைகள் மனித வாழ்வை உள்ளார்ந்தும் ஆழமாகவும் அர்த்தப்படுத்தக் கூடிய ஆற்றல் மிகக் கொண்டது என நம்புபவர்களால் முன்னெடுக்கப்படும் எத்தனம் இது. இந்த பதினைந்து ஆண்டு காலத்தில் விம்பம் நடாத்திய குறுந்திரைப்பட விழாவின் வழியாக நம்பிக்கை தரக்கூடிய பல்துறை சார்ந்த பல சினிமாக் கலைஞர்கள் அடையாளம் காணப்பட்டு தாம் சார்ந்த துறைகளில் தொடர்ச்சியாக பயணிக்க ஊக்கம் பெற்றார்கள் என்பது மிக முக்கியம்.

தமிழக வணிக சினிமாவிலிருந்து விலகி நமக்கானதொரு சினிமாவை கண்டடைய விரியும் திரை வெளியில் ஈழம், புகலிட நிலப்பரப்புகளில் மாற்றத்திற்கான ஒரு மாறும் காலகட்டமாக இன்றைய சமகாலம் இருக்கிறது என்பதே இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது. புதிய சிந்தனைகள், ஆழமான கற்றலும் தேடலும், நவீன தொழில் நுட்பத்தினை ஆற்றலாக கையாளும் ஆளுமை விரிவு என பல்வேறு சேகரங்கள் நமக்கான சினிமாவுக்குள் வந்து சேர்கின்ற முக்கிய தருணங்களிது.

ஈழம் - புகலிட நிலப்பரப்புகளில் கடந்த பதினைந்து ஆண்டுகாலத்திற்குள் வந்துள்ள முக்கியமான, கவனத்திற்கொள்ளத்தக்க குறுந்திரைப்பட, முழுநீளத் திரைப்பட முயற்சிகள், படைப்புகளை பார்த்தால் நடந்துள்ள, நடந்து வருகின்ற இந்த மாற்றங்களையும் வளர்ச்சியையும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். இந்த நம்பிக்கையான மாற்றங்களுக்காக, இந்த புதிய உதயத்திற்காக விம்பம் செய்கின்ற சிறு பங்களிப்பே இந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாக்கள்.

-----------

இன்றைய நிகழ்வில் எமது மதிப்புக்குரிய மு. புஷ்பராஜன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருப்பது இந்த நிகழ்வை மேலும் கனதிக்குள்ளாக்கி உள்ளது. மு. புஷ்பராஜன் அறிவும் ஆற்றலும் தேடலுமிகு நம்காலத்தின் மூத்த படைப்பாளி, விமர்சகர், தீரா வாசிப்பாளர். நவீன சினிமா தொடர்பான இவரது ஈடுபாடும் இரசனையும் வியக்க வைக்குமளவுக்கு விரிவு கொண்டது. விம்பத்தின் அனைத்து முயற்சிகளுக்கும் பின்னால் இருந்து வரும் நண்பர் மு. புஷ்பராஜன் அவர்களை கௌரவிப்பதில் விம்பம் பெருமை கொள்கிறது.

-----------

இந்த நிகழ்விற்காக தமது குறுந்திரைப்படங்களை அனுப்பியவர்கள், இந்த குறுந்திரைப்பட உருவாக்கங்களில் பங்காற்றிய அனைத்துக் கலைஞர்கள், விளம்பரங்கள் தந்துதவியோர், விருதுகளுக்கான குறும்படத் தேர்வில் பங்களித்தோர், நிகழ்வு சிறப்புற பங்களிக்க வந்திருப்போர் அனைவருக்கும் விம்பத்தின் நன்றிகள்!

# மு. புஷ்பராஜன்: குருநகரின் முகவரி

## மு. நித்தியானந்தன்



படம்: எஸ். சாந்தகுமார்

யாழ்ப்பாணத்தில் நான் பழகக் கிடைத்த நண்பர்களில் புஷ்பராஜன் அபூர்வமானவர். அழகான இளைஞனாக - அமைதியும் தேடலும் வாசிப்பும் மிக்க இலக்கிய ரசிகனாக புஷ்பராஜனும் நானும் ஏ.ஜே.யுமாக யாழ் ரீகர் தியேட்டருக்கு முன்னால் உள்ள தேநீர்க்கடையில் உரையாடிக்கொண்ட நாட்கள் என் மன அடுக்கில் என்றும் தேங்கிக்கிடப்பவை.

லண்டன் வந்த பிறகும் அந்த நல்ல நண்பரின் இனிய நட்பு நீடித்தது. விமர்சனக்கூட்டங்களில், கலந்துரையாடல்களில், கருத்தரங்குகளில், திரைப்பட நிகழ்வுகளில், ஒன்றுகூடல்களில், கடற்கரைச் சுற்றுலாக்களில், குடும்ப நிகழ்வுகளில் எல்லாம் நண்பராய் - நல்ல சகோதரனாய் பழகிய புஷ்பராஜன், லண்டனைவிட்டு, தன் குடும்பத்துடன் இணைந்து வாழ கனடா சென்றபோது, அந்தப் பிரிவினைத் தாங்க முடியாதவன் நான் மட்டுமல்ல, மிகப்பல லண்டன் இலக்கிய நண்பர்களும்தான். இருந்தாலும், கனடாவில் இன்றும் அவருடன் தொலைபேசியில் உரையாடிக்கொள்ள முடிவது திருப்தி தருவது.

புஷ்பராஜன் மென்மையான சுபாவம் கொண்டவர். மாமரத்து நிழலின் கீழ், மருந்துக்கு நிற்கையிலே, அருகில் இருந்த பொன்னபேத் என்னும் தன் சின்னப்பெரியம்மாவை, நினைவுகூரும் மென்மை அது. மு.தளையசிங்கம், ஏ.ஜே.கனகரட்ன போன்ற ஆளுமைகளின் சிந்தனைகளால், பழக்கத்தால் வார்க்கப்பட்ட மென்மை அது. தன் முடிவுகளில் உறுதியாக இருந்தாலும், கூட்டங்களில் தன் குரலை உயர்த்தாத மென்மை. 'அலை' ஆசிரியர் குழுவில் இருந்தாலும், அலை பற்றி நீட்டி முழக்கி, டமாரம் அடிக்காமல் மௌனமாய் விலகும் மென்மை. அயலவரை, ஊரவரை அணைத்துக்கொள்ளும் மென்மை.

கலகக்காரன் போன்ற tagகளை அவர் குத்திக் கொள்வதில்லை. நாலு பரப்புக்காணியைத் திரும்பத் திரும்ப உழுத கதையாய் - மாய்ந்து மாய்ந்து பேட்டி கொடுக்கும் அவஸ்தை அவரிடம் இல்லை. ஆரவார இலக்கியச் சந்தையில், நொய் நொய் என்று ரீங்காரமிடும் ஈக்களின் தொல்லைகளிலிருந்து வெகுதூரம் விலகி இருப்பவர்.

குருநகர் அவரது ரத்த நாளங்களிலும் நரம்புகளிலும் ஊறித் தோய்ந்திருக்கிறது. 'குருநகர்: கடலோரத்தில் ஒரு கல்வாரி' என்ற தலைப்பில் குருநகர் பற்றிய விவரணப் படத்தை தீபம் தொலைக்காட்சிக்காக நான் தயாரித்தபோது, அவர் மகிழ்வோடு தன் உழைப்பை நல்கியிருந்தார். 'இத்தனை ஆண்டுகள் கழிந்தும் இன்றும் எம் கனவுகளில் உயிர்கொண்டு உலவுவது அந்தப் புழுதி மணலும் உப்புக்காற்று உலவும் நெய்தல் நில கோலங்கள் தான்' என்று குருநகரின் மான்மியம் பாடும் பாணன் அவன். தமயந்தி தன் 'ஏழு கடல்கன்னிகள்' கதையிலே சொல்லுவது போல், அவன் கடலின்பொருட்டு கர்வமுடையவன். 'கடல் அதுவே எங்கள் வாழ்வாதாரமும் மகிழ்ச்சியும். அத்தேவதை சினம் கொள்ளும் போதெல்லாம், திசையறியாது அலைந்து, கரையொதுங்காமல் போனவர்கள் ஏராளம். அவள் கோபமுறும் காலங்களில், அச்சம் கரிய இருளாய் ஊர்மீது கவிந்திருக்கும். ஆயினும் எம்மால் அவளை வெறுக்க முடிவதில்லை. தேவதையின் சினம் தணிந்து, தன் மெல்லிய அலைகளால் சிரிக்கும் வரை, வேண்டிக்கொள்வதைத்தவிர, வேறு வழியேதும் எமக்கு இருப்பதில்லை. அவள் சிரிப்பில், எங்கள் வீட்டு முற்றத்தின் வெண்மணலில் பூக்கள் விரியும். அன்றாடம் காய்ச்சிகளின் சமையல் அறைகளிலிருந்து புகை வெளியேறும்' என்று புஷ்பராஜனின் கவிமனம் லயித்துக்கிடப்பதெல்லாம் ஓயாது கடலலைகள் கொஞ்சி விளையாடும் குருநகரில்தான்.

தனது கற்பிதத்தில் உருவாக்கிக் கொண்ட ஒரு நிழல் எதிரியை வீழ்த்துவதற்காக, தன்னை கீழோர் வட்டமாகக் காட்டுவதற்காக தான் சாதாரண கடற்றொழிலாளியின் மகன், என்று கடலில் பிறந்த குற்றத்திற்கு பாவசங்கீர்த்தனம் கேட்பவனல்ல புஷ்பராஜன்.

'வலை உணங்கு குருமணல்' என்ற புஷ்பராஜனின் நூல், அவரே கூறுவதுபோல, 'எந்தையும் தாயும் அதன்பின் நாமுமாய் மகிழ்ந்து உலாவிய மண்ணையும் அதனை மருவி வழியும் கடலையும் பற்றிய மனப்பதிவுகள்'தான்.



இலங்கையின் இனவரைவியல் (ethno-graphy) துறைக்கு வந்த சேர்ந்திருக்கும் அற்புதமான வரவு இந்நூல்.

ஆய்வு, ஆதாரம், அனுபவம் என்ற தளத்தில் நிர்மாணம் கொண்டிருக்கும் இந்நூலுக்கு இணையாக இன்னுமொரு நூல் குருநகர் குறித்து எழுதுவதற்கு நாம் மிகமிக நீண்ட காலம் காத்திருக்கவேண்டும். 'தென்தமிழ் நாட்டுக் கத்தோலிக்க மீனவர்களின் வாழ்வியலைப் பதிவு செய்ய விரும்புவோருக்கு இந்நூல் வழிகாட்டியாக அமையும் தன்மையது. என்று சான்று வழங்குபவர் ஆய்வறிஞர் ஆ.சிவசுப்பிரமணியன்.

*நிலவொளியின்*
*மம்மல் படர்ந்த வீதிகளில்*
*தோளில் சுமந்த*
*மரக்கோலும் வலையுமாய்*
*கடல்முகம் சிலர் விரைய*
*கோவில் நோக்கி*
*அன்னையர் துணையோடு*
*துப்பட்டி சகிதம்*
*பின்செல்லும் கன்னியர்*
- புஷ்பராஜனின் காலை நேரச் சித்திரங்கள்.

*அந்தியின்*
*மங்கல் அடிவானம்*
*கருமை ததும்பும் கடல்*

*களங்கட்டி வலைக்குள்*
*வயிறுகள் எத்தனையோ..,*
- இது அந்திநேரத்து அவதானம்.

*வியாகுலமாதா முன்னே*
*வழியும் கண்ணீருடன்*
*வயிறு பசித்திருக்க*
*தூரக் கச இருட்டில்*
*கடலோடு ஒருவன்*
*கண்விழித்து மாய்கின்றான்*
- இது இரவுநேரத்தின் இதயக்குமுறல்.

புஷ்பராஜனின் நெஞ்சில் கணமும் பொழுதும் நடமாடும் நெய்தல் நில மாந்தர்கள் இவர்கள். அவர்களது பாடுகளும், ஆசைகளும், பசிகளும், ஏக்கங்களும் மகிழ்ச்சிகளும் புஷ்பராஜனின் மனோலயத்தில் எப்போதும் எதிரொலிப்பவை. புஷ்பராஜனின் 'மீண்டும் வரும் நாட்கள்' ஒரு கடலோரச் சிற்றூரின் வாழ்வு ஓட்டத்தை, யுத்த பூமியின் கொதிநிலையை, புலம்பெயர் வாழ்வின் அவலத்தை - மூன்று வெவ்வேறு வாழ்வுச் சூழல்களின் பின்னணியில் வெளிப்படுத்தும் அசலான கவிதைகள். 'மின்னொளி வீசும் தேனீர்க் கடையொன்று மீனவர்க்காய் முழித்திருக்கும், அதிகாலையிலிருந்து சூழவும் உடைபடும் கடைகளின் ஒலியும் வெறிக்கூச்சலும் வேற்றுமொழியும் விண்ணுயர்ந்த தீச்சுவாலையும், எழுந்த சூழலிலிருந்து, தனிமைக் காற்றோடு அள்ளுண்டசருகாய், நிலையற்றுப் பரவும் புலம்பெயர்வாழ்வுவரை புஷ்பராஜனின் கவிதைகள் நீள்கின்றன. பாப்லோ நெருடா கூறும் elongated homelandஐ நெஞ்சில் சுமந்து திரியும் கவி புஷ்பராஜன். செட்டான வார்த்தைகளும் ஆழ்ந்த ஆத்ம விசாரமுமாய் அவரின் மென்மையான கவிமனத்தின் விகசிப்பை, ஆத்திரமும் ஆவேசமும் கொள்ளும் சூழலிலும் நிதானமாய் கவிவிரித்துச் செல்வதைக் காணமுடியும்.




ஆங்கிலம் வழி இலக்கிய வாசிப்பின் நீட்சி புஷ்பராஜனின் விமர்சனக் கட்டுரைகளுக்கு புதிய பலத்தைச் சேர்த்திருக்கின்றன. சோவியத் நாவல்களின் மீது அவருக்கு நிறைந்த ஈடுபாடு உண்டு. டால்ஸ்டாய், டாஸ்டாவ்யெஸ்கி, போரிஸ் பஸ்டர்நாக், அன்னா அக்மத்தோவா போன்ற சோவியத் இலக்கிய ஆளுமைகள் அவரிடம் தீர்க்கமான பாதிப்பை ஏற்படுத்தி இருக்கின்றனர். சோவியத் இலக்கியாசிரியர்கள் ஈழத்துச் சூழலில் நமக்கு மிகவும் பரிச்சயமானவர்களாயிருந்த போதும், லத்தீன் அமெரிக்க இலக்கியங்களுடனான ஈடுபாடு நம்மிடம் அத்துணை இருந்ததில்லை. லத்தீன் அமெரிக்க இலக்கியங்கள் பற்றிய நமது பார்வையை விஸ்தீரணப்படுத்தியவர்களில் ரெஜி சிறிவர்த்தன முதன்மை இடம் வகிக்கிறார். புஷ்பராஜனின் லண்டன் வாழ்வில் லத்தீன் அமெரிக்க இலக்கியத்துடனான பரிச்சயம் சற்று வேகம் கொண்டது எனலாம்.

சர்ச்சைக்குள்ளான இலக்கிய ஆளுமைகள் எல்லாம் அவரது வாசிப்பின் பரப்பில் நின்றிருக்கிறார்கள். தஸ்லிமா நஸ்ரீன், பஸ்டர்நாக், ஹரோல்ட் பின்ரர், டான் பிரவுன், பிறைடா போன்றோர் குறித்து நுணுக்கமான கட்டுரைகளை புஷ்பராஜன் எழுதியிருக்கிறார்.

தா.இராமலிங்கம், செழியன் ஆகிய கவிஞர்கள் குறித்த புஷ்பராஜனின் கட்டுரைகள் அவரது நுட்பமான கவிநயத்திற்கும் எழுத்து வன்மைக்கும் சாட்சி சொல்வன. லஷ்மி ஹோம்ஸ்ட்ரம், செழியன் ஆகியோரின் இறுதி யாத்திரை பற்றிய அவரின் குறிப்புகள் நெஞ்சை நெகிழ வைப்பன.

கூத்து, நாடகம். நடனம், இசை, ஓவியம் போன்ற கவின்கலைகளிலும் ரசனையும் அவதானிப்பும் கொண்டவர் புஷ்பராஜன். இசைக்குயில் எம்.எஸ். மீது ஆதுரம் மிகக் கொண்டவர். D.J.S.George எழுதிய A life in Music என்ற நூலை வாசித்து எம்.எஸ்.இன் வாழ்வுமீது கவிந்திருந்த துயரச்சாயல் குறித்து புஷ்பராஜன் வெகுவாக வருந்தியிருந்தார்.

கூர்மையான சினிமா ரசனையும் கொண்ட புஷ்பராஜன், தேர்ந்த திரைப்படங்களைத் தேடிப் பார்ப்பவர். திரைப்படங்கள் குறித்த கலந்துரையாடல்களில் தனது ஆழ்ந்த ரசனைக் குறிப்புகளை வெளிப்படுத்துபவர். 'விம்பம்' நடத்திய உலகக் குறும்படங்களின் தேர்வுகளின்போது, புஷ்பராஜனும் நடுவராக இருந்து, பரிசீலனைக்குக் காத்திரம் தந்திருக்கிறார்.

எது பற்றியும் எழுதப்புகும்போது, ஆறுதலாக, நிதானமாக, நூல்களைத் தேடி, பரபரப்பு இல்லாமல் எழுதும் பண்பு புஷ்பராஜனுடையது. பத்தி எழுத்துகள் அவருக்கு சரிப்பட்டு வராது. வாராவாரம், மாதாந்தம் தொடர் எழுதிக்கொண்டிருக்கும் ஆக்கினைகளுக்கு அவர் ஆட்பட்டுக் கொள்வதில்லை. ஈழத்து நாவல்கள் குறித்து 'காலம்' இதழில் புஷ்பராஜன் எழுதிவரும் கட்டுரை அவரது விசாலமான தேடலையும், விமர்சன வீச்சையும் வெளிப்படுத்துவதாகும். அவரது ஆறுதலான எழுத்திற்கு, 'காலம்' இதழின் ஆறுதலான வருகையும் பரஸ்பரம் உதவிக் கொள்கின்றன போலும்!

ஒரு கவிஞன், எழுத்தாளன், விமர்சகன், சுவைஞன் என்பவற்றை எல்லாம் மீறி உயர்ந்த பண்புகளும். உன்னத நெறிகளும் கொண்டவர் புஷ்பராஜன். உறவுகளை மதிப்பவர். நட்பைப் பேணுபவர். நேசம் மிக்கவர். நட்புகளில் விரிசல் வருகிறபோது, நட்பாக இருந்த காலத்து நிகழ்வுகளுக்கு அனர்த்தம் பூசுவதும், திடீர்ப்பொறிதட்டி character assasination செய்ய முனைவதும் போன்ற குரோத வெளிப்பாடுகளை புஷ்பராஜனிடம் கிஞ்சித்தும் காண்பதற்கில்லை. அவரவர் கருத்துடன், புரிதலுடன் வாழப் பழகுதலே இனிதும் நிறைவும், என்று கருதுபவர் புஷ்பராஜன். புத்தக வாசிப்பு என்பது அவருக்கு ஆத்மார்த்தமான உள்நோக்கிய விசாரத்திற்கான திறவுகோல். வெளியில் தன் வாசிப்புப் பட்டியலை விரிப்பதற்கல்ல. மனுக்குலம் மீதான கரிசனை அவரில் எப்போதும் வேரோடிக்கிடப்பது. சத்தியதரிசியாகவோ, புனிதராகவோ அவர் சாதுர்ய வேஷம் காட்டுபவர் அல்ல. ஏ.ஜே. குறித்த அவரின் கட்டுரை புஷ்பராஜனின் வாழ்க்கை நெறிகள் பற்றி சூசகமாகச் சொல்கிறது.

●

## வாழ்த்துச் செய்தி

லண்டனிலிருந்து செயல்படும் விம்பம் ஆண்டுதோறும் சிறந்தஈழத் தமிழ்க் குறும்படங்களுக்கு விருதுகள் வழங்கியும் மக்கள் மத்தியில் திரையிட்டும் உயரிய கலைப் பணி ஆற்றி வருகிறது. குறும்படங்களுக்கான அங்கீகாரமும் திரையிடல் வாய்ப்புகளும் குறைவாக உள்ள இன்றைய சூழலில் விம்பத்தின் செயல்பாடுகள் மிகுந்த பாராட்டுக்கு உரியவை.

இம்மாதம் பதிமூன்றாம் தேதி ஈஸ்ட் காமில் உள்ள டிரினிட்டி சென்டர் அரங்கில் நடக்கும் விழாவில் குறும்பட விருதுகள் பெற விருக்கும் கலைஞர்களுக்கும் குறும்பட ரசிகர்களுக்கும் விம்பம் உறுப்பினர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.

அம்ஷன் குமார்
(திரைப்பட இயக்குநர்)

# சத்யஜித் ரேயின் TWO - இருவர்

மு. புஷ்பராஜன்



பிரமாண்டமான தோற்றத்தில் ஒரு வீட்டின் மாடிப் பகுதி. அண்ணாந்து பார்க்கும் தோற்றம். பின்னணியில் சிறு துண்டு வானம் மட்டும் பார்வையில் படுகிறது. மெல்லிய இசையுடன் செல்வந்த சிறுவன் ஒருவன் அந்த மாடியில் தோன்றுகிறான். அரைக் காற் சட்டை, கட்டம்போட்ட சேட்டு, தொப்பி. கொக்கோகோலா அருந்தியபடி வீட்டிலிருந்து வெளியே செல்லும் காரை கையசைத்து வழியனுப்புகிறான். திருப்பி வீட்டினுள் செல்கையில் இடையில் அணிந்திருக்கும் விளையாட்டு வாள் நம் கண்ணில் படுகிறது.

வீட்டினுள் வந்த அவன் நிலத்தில் இருந்த பந்தை உதைத்துவிட்டு சோபாவில் அண்ணாந்து படுக்கிறான். அவன் அருகில் சில பலூன்கள். மேலே மின்சார விசிறி சுற்றிக்கொண்டிருக்கிறது. கூரையில் பலூன்கள் கட்டப்பட்டுள்ளன. அருகிருந்த தீப்பெட்டியில் ஒரு குச்சை எடுத்து தட்டி தன் மூக்கருகே பிடித்து முகர்கிறான். ஊதி அணைத்துவிட்டு மீண்டும் ஒரு குச்சியை எடுத்து பலூனில் பிடித்து அதை உடைக்கிறான். மீண்டும் ஒன்று. ஒரு இராஜ கம்பீரத்துடன் தனது விளையாட்டுப் பொருட்கள் வரிசைப்படுத்தப்பட்ட இடத்திற்கு நகர்கிறான். நிலத்தில் ஏற்கனவே சிறுசிறு அடுக்குகளால் அடுக்கப்பட்டிருந்த கோபுரத்திற்கு இறுதியாகயிருந்த சிகரத்தையும் பொருத்திவிட்டு தனது விளையாட்டுப் பொருட்களை நோக்குகிறான். எல்லாம் நவீனரகம். குரங்கு பொம்மையின் சுவிச்சை போடுகிறான். அது கிட்டார் வாசிக்கிறது. அப்போதுதான் வெளியில் குழலோசை கேட்கிறது. அதை உற்றுக் கேட்டவன் விரைந்து வந்து யன்னல் வழியாகக் கீழே பார்க்கிறான். ஏழைச் சிறுவன் புல்லாங்குழல் வாசித்துக்கொண்டு நிற்கிறான். அவனைச்சுற்றி மண்டிக்கிடக்கும் புற்கள் காற்றில் அசைகின்றன. சற்றுத்தள்ளி ஏழ்மையின் அனைத்துக் கோலங்களுடன் ஒரு குடிசை. இப்போது மாடிவீட்டுப் பையனிடம் சவாலை எதிர்கொள்ளும் முகபாவம். உள்ளே சென்று திரும்பி

வந்தவனிடம் நவீனரக ஊதுகுழல். யன்னல்வழி அதை உரக்க ஊதுகிறான். 'பார் என்னிடம் இருப்பதைப் பார்' என்பதுபோல் ஊதுகிறான். ஏழைச் சிறுவன் தனது புல்லாங்குழலை நிறுத்திவிட்டு ஏக்கமாக யன்னலைப் பார்க்கிறான். பின் தனது குடிசையை நோக்கி ஓடியவன் பறையுடன் திரும்பினான். அதை அடித்தபடி சுற்றிச்சுற்றி வருகிறான். இப்போது இருவரிடையில் போட்டி உருவாகி விட்டது. யன்னலில் குரங்கு பொம்மை drum அடிக்கிறது. புற்களிடையே முகமூடியுடன் அம்பும் வில்லுமாக ஏழைச் சிறுவன் குதித்து வருகிறான். யன்னலில் தோன்றும் முகம் முகமூடியுடன் கா கா வென வாளை வீசிக் காட்டுகிறது. பின் குத்தீட்டி அசைகிறது. மூன்றவதாக மெக்சிக்கன் தொப்பியுடன் நவீன இயந்திரத் துப்பாக்கி சுட்டுகிறது. அத்துடன் யன்னலில் தோன்றும் முறுக்கியமீசை. சோர்ந்துபோன முகம் குடிசைக்குத் திரும்புகிறது. பெருமிதத்துடன் தான் அறைக்குத் திரும்பிய வெற்றியாளன். தனது சுடுகலன்களை அதனதன் இடத்தில் வைக்கிறான். அதுவரை சப்பிக்கொண்டிருந்த சுவிங்கத்தை வெளியெடுத்து விளையாட்டுப் பொருளில் ஒட்டுகிறான். சாவகாசமாக பிரிஜ்ஜைத் திறந்து எடுத்த ஆப்பிளைக் கடித்துக்கொண்டு யன்னலைப் பார்த்தவனுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. யன்னலூடாக பட்டம் ஒன்று பறந்துகொண்டிருந்தது. ஆச்சரியத்துடன் யன்னலால் கீழே பார்த்தான். புற்களின் நடுவே அவன் மகிழ்ச்சியாக பட்டத்தை நூல்வழி அசைத்தபடி யன்னலைப் பார்த்துக்கொண்டிருந்தான். வேகமாகத் திரும்பிச் சென்றவன் catapultஉடன் வந்து பட்டத்திற்கு இலக்கு வைத்தான். தோல்வி. பட்டம் ஒரு வண்ணத்துப்பூச்சி போல அசந்து அசைந்து ஆடுகிறது. புல்லிலிருந்த முகத்தில் மகிழ்ச்சி. மீண்டும் இலக்கு. மீண்டும் தோல்வி. ஏமாற்றத்துடன் திரும்பும் அவன் கண்ணில் சுவருடன் சாத்தப்பட்டிருக்கும் நீண்ட துப்பாக்கி. வன்மத்துடன் அதற்குரிய தோட்டாக்கள் போடுகிறான். யன்னல்வழி நீண்ட துப்பாக்கி இப்போது பட்டத்திற்கு இலக்கு வைக்கிறது. புல்லில் நின்றவன் கலவரமடைந்து துப்பாக்கியையும் பட்டத்தையும் மாறிமாறிப் பார்க்கிறான். யன்னலிலிருந்து வந்த இலக்குத் தப்பவில்லை. வெடிபட்டுச் சிதைந்தது. மண்ணில் வீழ்ந்தது பட்டம். கவலையுடன் யன்னலைப் பார்த்தான். யன்னலிலிருந்து வெற்றிப் பெருமிதம். நாக்கை நீட்டிப் பழிப்பு. தோல்வியின் சுமையோடு புல்வழி குடிசை நோக்கிய நடை.


வெற்றிக் களிப்புடன் தான் அறைக்குத் திரும்பியவன் துப்பாக்கியை கட்டிலில் எறிகிறான், மீண்டும் ஆப்பிளில் ஒரு கடி. வெற்றிக் களிப்பில் தனது அத்தனை விளையாட்டுப் பொருட்களையும் இயக்குகிறான். அவைகள் ஆரவாரத்துடன் தம் ஒலிகளை எழுப்புகின்றன. ஒரு இயந்திர மனிதனை நிலத்தில் வைத்து இயக்குகிறான். அது ஆடி ஆடி நகர்கிறது. அந்த ஆரவாரங்களிடையே ஆரம்பத்தில் கேட்ட புல்லாங்குழல் ஓசை மீண்டும் கேட்கிறது. யன்னலை நோக்கினான். அசையும் யன்னல் சீலைகளுக்கு இடையில் தெரியும் வெளியில் புல்லாங்குழல் ஓசை கேட்டுக்கொண்டு இருக்கிறது. களைப்பும் சோர்வும் மேலிட தான் கட்டிலில் அமர்கிறான். அவனது இயந்திரமனிதன் அசைந்து அசைந்து நகர்ந்தது. அவன் அமைத்துவைத்த கோபுரத்தைத் தகர்க்கிறது.

பன்னிரண்டு நிமிட குறும்படம்தான். அதற்குள் சத்யஜித் ரே என்னும் மகத்தான கலைஞன் எழுப்பும் உணர்வு அலாதியானது. கருத்து சர்வதேசமயமானது. ஆம் இது ஒரு யுனிவேர்சல் தீம்தான் பார்வையாளர்கள் அவரவர் கொள்ளளவுகளுக்கு ஏற்ப விசாகம் கொள்ளக்கூடியது. பன்முக தளங்கள் கொண்டவை .அந்த இரண்டு சிறுவர்களின் போட்டி மனப்பான்மைக்கு இக் கருவை அப்பால் குடும்ப உறவுகளுக்குள், சாதிய உறவுக்குள், சமய உறவுக்குள், கிராமங்களுக்குள், நாடுகளுக்குள்

அனைத்துள்ளும் வைத்துப் பார்க்கக்கூடியவைதான். இதன் இசை இரு சிறுவர்களுக்கும் வித்தியாசமாக இசைக்கப்படு கிறது. பணக்காரச் சிறுவன் வெற்றி வீரனின் வரவுக்குரிய இசையுடன்தான் தோன்றுகிறான். இசை பெரும்பாலும் இச் சிறுவன் மனநிலைக்குத்தான் பாவிக்கப்படுகிறது. ஏழைக்கு சூழ்நிலைக் குரிய மௌனமே இசையாகிறது. அந்த மாடி வீட்டுச் சிறுவன் என்ன மாதிரி உணர்வுகளை, உடலசைவுகள் மூலம் வெளிப்ப டுத்துகிறான்.

சத்யஜித் ரே இன் இக் குறும்படத்தைக் இவ்வளவு விரிவாகக் குறிப்பிடக் காரணம் நமது குறுந் திரைப்படம் எடுப்போர் இதை முன்னோடியாகக் கொண்டு தம்மை சரியான திசையில் விசாலப் படுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காகவேதான். இது மேலாண்மை மனப்பான்மை அல்ல. நட்பான ஒரு ஆலோசனை தான். இன்று குறும்படம் எடுப்பவர்கள் அநேகர் முழுநீளத் திரைப்படக் கதைகளைக் குறும்படத்தினுள் திணித்துக் கொண்டிருப்பதை அவதானித்துள்ளேன். இவைகள் பெரும்பாலும் தமிழ் திரைப்படங்களையே முன்னுதாரணமாகக் கொண்டுள்ளவை. தேர்ந்துகொள்ளும் கதையை குறுந்திரைப் படச் சட்டகத்துள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பது ஒரு சவால்தான். இந்தச் சவாலை ஒருசிலரே எதிர்கொள்கிறார்கள். ரேயின் 'தேவி' ஒரு முழுநீளத் திரைப்படம்தான். ஆனால் அதனை ஒரு குறுந் திரைப்படமாகவும் அமைக்கலாம். அது சவால்தான். அவ்வகைச் சவால்களை நம்மவர்கள் சோதனை யாகவாவது எதிர்கொள்ள வேண்டும்.

வசனங்களால் எல்லாவற்றையும் விளக்கலாம் என்பதை நிராக ரிக்க வேண்டும். அதற்கு மேற்குறிப்பிட்ட Two குறும்படம் ஒரு உதாரணம். அவசியமான, தேவை கருதிய இடங்களில் கள்ளிச் சொட்டுப் போன்று உரையாடல் முக்கியம். முக்கியமாக



சத்யஜித் ரே இன் 'தேவி'

திரைப்படத் துறையினருக்கு இலக்கியப் பரிச்சயம் இருப்பது நன்மை தரக்கூடியதே. உலகின் முக்கியமான திரைப்பட நெறி யாளர்கள் தங்கள் நாட்டு இலக்கியப் பரிச்சயமுடையவர்கள் தான். குறுந்திரைப்படம் எடுப்போர் குறைந்த பட்சம் நல்ல சிறுகதைகளையாவது வாசிப்பது அவசியமானது என நான் கருதுகிறேன். எனது கருத்துக்கள் நல்ல திரைப்படங்கள் அமையவேண்டும் என்ற பேரவாவினால் ஏற்பட்டவையே.

●

# ஈழ சினிமாவின் புதிய நகர்வுகள்

**நா**ன் கடந்த பல ஆண்டுகளாக புலம் பெயர் சூழலிலும் இந்தியாவிலும் பல திரைப்பட விழாக்களில் நடுவராக பணியாற்றியிருக்கிறேன். டிஜிடல் தொழில்நுட்பம் வந்த பிறகு குறும்படங்கள், ஆவணப்படங்கள் அதிகம் வர ஆரம்பித்தது மனதிற்கு நிறைவாக இருந்தது. அதில் 'விம்பம்' (கே.கே. ராஜா, எஸ். சாந்தகுணம், போல், யமுனா ராஜேந்திரன், தோழர் வேலு, கோகிலரூபன், மாதவி சிவசீலன், மீனாள் நித்தியானந்தன், நவஜோதி ஜோகரட்ணம், மு. நித்தியானந்தன், எஸ். வாசன், எம். பௌஸர், பத்மநாபஐயர் போன்றவர்களை உள்ளடக்கியது) மற்றும் கனடா ரதனின் சுயாதீன சினிமா செயல்பாட்டினருடன் எனக்கு தொடர்ந்து பங்கு பெறும் வாய்ப்பு கிட்டியது. இலங்கையில் இருந்தும் புலம்பெயர் சூழலிலும் வரக்கூடிய படங்கள் நிறைவளிப்பதாக இருந்தன. ஒரு நெடும்படத்திற்கான கருவை குறும்படத்தில் திணிப்பதிலிருந்து குறும்படத்திற்கான உருவ உள்ளடக்கத்தை நோக்கி அவை கடந்த ஐந்தாண்டுகளில் நகர்ந்தன. போருக்குப்பின் இனஅழிப்பின் வலியையும் வாழ்வின் வேதனைகளையும் சொன்ன தரமான படங்கள் நாளை இக்காலகட்டத்தின் பேராவணமாக திகழும் என்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை.

புலம்பெயர் சூழலிலுள்ள இன்றைய பிரச்சினைகளை அலசும் படங்களும் வரத்தொடங்கியிருப்பது முக்கியமானது. வாழ்வு ரத்தத்துடன் கலங்கிய வாய்க்காலாக ஓடும்பொழுதும் நாம் ஓடித்தானே ஆகவேண்டியிருக்கிறது. மேற்பரப்பில் நீந்திக் கொண்டே நமது நினைவேக்கம் நிறைந்த ஆழ்மனது இழுக்கும் திசையில் செல்லத்தானே வேண்டியிருக்கிறது. குறும்படங்களின் போக்கு அதைப்பிரதிபலிக்கின்றது. சில அபாரமான திறமைகளையும் இனம் கண்டிருக்கிறோம். அவதாரம் குழுவினர், பிரான்சு நண்பர்களுமான சதா பிரணவன், மன்மதன் பாஸ்கி, மற்றும் ப்ரேம் கதிர், இளங்கோ ராம், சுஜித் ஜீ, மதி சுதா, பிரதீபன் செல்வன், மணிமாறன், கமலைக்கண்ணன்என்று ஒரு விரிந்துக்கொண்டிருக்கும் பட்டியலைக் குறிப்பிடலாம்.

இந்த வருடம் மிக முக்கியமான இடை யீடு என்றால் பெண்கள் உருவாக்கத்தில் இலங்கையிலிருந்து வந்திருக்கும் சிறகுநுனி செண்டர் பார் ஆர்ட்ஸ் அண்ட் மீடியாவின் பெண்ணிய நோக்கில் எடுக்கப்பட்ட படங்கள். அயல்வெளிகளில் எடுக்கப்பட்ட படங்கள் இருத்தலியல் சார்ந்த பிரச்னைகளை முன்நகர்ந்து எதிர்கொள்வது ஆழமாக உள்ள அதே வேளையில் இன பேரழிப்பின் வடுக்கள் ஆறாமல் இருப்பதை மதி சுதாவின் ஆக்கம் உணர்த்தி குறும்படம் எனும் உருவத்தின் இன்றியமையாமையை நமக்குச் சொல்லிச்செல்கிறது. சிறப்பு விருந்தினர் இலக்கிய கர்த்தா மு.புஷ்பராஜன் அவர்களுக்கு வாழ்த்துகள். பங்கு பெற்ற அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**- சொர்ணவேல் ஈஸ்வரன்**

அமெரிக்க மிச்சிகன் பல்கலைக்கழகத் திரைத்துறைப் பேராசிரியர்

## 10th International Tamil Short Film Festival

### விம்பம் - 10ஆவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா - 13 April 2019

Welcome Speech: Rajitha Sam Pratheepan
Introduction by Ilaya Abdullah

| | | | |
|---|---|---|---|
| 1. பேராசை | - K. Sharma & S.V. Jeyaraj | - London | 14.00 (Mins) |
| 2. உறவுச்சிறை | - K. Sivakumar | - Canada | 22.00 (Mins) |
| 3. வெடிமணியமும் இடியன் துவக்கும் | - Ma Thi Sutha | - Sri Lanka | 15.20 (Mins) |
| 4. ஆலவாயான் | - V. Jeneshan | - France | 09.00 (Mins) |
| 5. Fake ID | - Kamila Kaleel | - Sri Lanka | 07.00 (Mins) |
| 6. தலைமுறை | - S.V. Jeyaraj | - London | 05.50 (Mins) |
| 7. தர்மா (i-phone film) | - Ma Thi Sutha | - Sri Lanka | 02.00 (Mins) |
| 8. முதிரா வித்துக்கள் | - Vimalraj | - Sri Lanka | 05.00 (Mins) |
| 9. Infinity | - Dila Chan | - Sri Lanka | 11.50 (Mins) |
| 10. அபயா | - Ashfaque, Dayani & Kamila | - Sri Lanka | 05.20 (Mins) |
| 11. மணல் நாடு | - S. Sivaruban | - Canada | 09.00 (Mins) |
| 12. The Secret Shadow | - Dila Chan | - Sri Lanka | 11.00 (Mins) |

**Audience Voting**

**INTERVAL**


**Special Screening**

13.வேடம் - Amal - France - (09.00 Mins)

**Honouring Director Puthiyavan Rasaiah for his film ஒற்றைப் பனைமரம்**

**Guest Speaker's Address: M. Pushparajan**

**Award Ceremony**



# தோழர் புதியவனின் ஒற்றைப் பனைமரம்

எம். பௌசர்

இலங்கை/ஈழ தமிழ் சினிமா தனித்துவமானது. அதனை மணிரத் தினத்தின் 'கன்னத்தை முத்தமிட்டால்' தொடங்கி, சந்தோஷ் சிவனின் The Terrorist வரை வெளிப்படுத்த முடியாது.

தென்னிந்திய சினிமாவின் உச்சபட்ச தொழில் நுட்ப பிரயோகம் தொடங்கி பிரமாண்டமான பண முதலீடுகளை வைத்துக் கொண்டு உண்மையான இலங்கை தமிழ் சினிமாவை எடுத்து விட முடியாது என்பதை மெய்ப்படுத்தும் படம் தோழர் புதியவனின் ஒற்றைப் பனைமரம். குறைந்த வளங்களுடன் , சில தொழில் நுட்ப, காட்சிப்படுத்தல் குறைபாடுகளுடன் மிகை யதார்த்தமின்றி - போருக்குப் பின்னான வன்னி வாழ்வை மையப்படுத்தி, ஆனால் மொத்த தேசிய விடுதலைப்போராட்டம் தொடக்கம் இன்றுவரை உயிர்தப்பி வாழ்ந்து கொண்டிருக்கும் போராளிகளின் துயரமிகு வாழ்வை, பெருமிதங்களாலும் போலி அரசியல் கோசங்களாலும் நிரம்பி இருக்கும் அரசியல் முகத்தின் மீது-ஓங்கி அறையும் படம் தோழர் புதியவனின் ஒற்றை பனைமரம் என்றால் அது மிகையல்ல.


சமூகத்தில் பெரும்பான்மையாக ஆதிக்கம் செலுத்தும் கருத்தியல் போக்குகளை மேலும் வலுவூட்ட தன்பங்குக்கும் பக்கவாத்தியம் வாசிக்க கலையும் கலைஞனும் அவசியமன்று, mj wF 'கோயில் மேளம்' போதும். வாழ்வை உள்ளது உள்ள படி , உண்மைக்கு அணித்தாக நின்று, எந்த அச்சுறுத்தல், புறக்கணிப்பு வந்தாலும் துணிந்து சொல்ல ஒருவனால்/ ஒருத் தியால் முடியுமாக இருந்தால் , அங்குதான் கலையினதும் கலைஞனினதும் பணி பூரணத்துவம் அடைகிறது.

நேற்றைய - இன்றைய யாழ்ப்பாண சமூக சிந்தனையை/ தமிழ்த் தேசியவாத பிற்போக்கினை கேள்விக்குட்படுத்த நம் காலத்து கலைஞர்களுக்கு அதிக துணிச்சல் தேவை. இவற் றினை தொடர்ச்சியாக மாற்றுத் தளத்தில் பல ஆண்டுகளாக பலர் எழுதியும் பேசியும் வந்துள்ளனர். இன்று அதனை தோழர் புதியவனின் ஒற்றை பனைமரம் மீண்டும் சினிமா என்கிற கலை வடிவினூடாக மேலும் அழுத்தி இருக்கிறது. தோழர் புதியவனிடம் உள்ள நெஞ்சுரம் அவரது கலை வடிவத்தின் வழியாக வெளிப்பட்டு இருக்கிறது.

போரின் இறுதித் தருணத்தில் , இனப்படுகொலை நிகழ்ந்த மண்ணில் தொடங்கும் கதை. மூன்று பேரையே சுற்றி சுழலும் படம் . சுந்தரம், கஸ்தூரி, அஜாதிகா என்கிற பாத்திரங்கள். ஆனால் படத்தின் விரிவு ஒட்டுமொத்த தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் பல பகுதிகள் ... மாற்று இயக்க அழிப்பு, முஸ்லிம்களின் இனச்சுத்திகரிப்பு, மலையக தோட்டத் தொழிலாள பரம்பரை போராட்டத்தில் இணைந்த , பங்களித்த வரலாறு, சாதியம் தொழிற்படும் விதம், புலம்பெயர் நாடுகளில் தேசியத்தின் பெயரால் நிகழ்ந்த பொருளாதாரச் சேர்க்கை என முன் பாதி விரிகின்றது.

பின்பாதி, முன்னாள் போராளிகளின் கையறு நிலை, வறுமை, இலங்கை அரச புலனாய்வுப் படைகளின் முற்றுகை வாழ்க்கை, ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கண்காணிப்பு , சந்தேகத்தின் பேரிலான கைதுகள், சித்திரவதைகள், தடுத்து வைப்புகள், நிலமற்ற ஏழைப் போராளிகளின் துயரார்ந்த நிலை, வெளி நாட்டிலிருந்து செல்லும் போராட்டத்தினை ஆதரித்த, அதனூடாகப் பொருள் சேர்த்த ஒரு பிரிவினரின் , போராளிப் பெண்கள் மீதான பாலியல் சுரண்டல்கள், விதவைகளின் அபல நிலை, எந்த வழியுமில்லாது இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் முன்னாள் போராளிகள் என படம் முழுதும் வன்னி மண்ணின் உண்மை வாழ்வு நம்மை உலுக்குகிறது.

உலகின் எந்தப் பகுதியிலும் , எங்கு போர் நடந்தாலும் பெண்கள், குழந்தைகளே அதிகம் துயருறுகின்றனர். கைவிடப்பட்டவர்களாய், அனாதைகளாய், நடைப்பிணமாய்... அதற்கு வன்னி இறுதி யுத்தமும் விதிவிலக்கல்ல. புதியவனின் ஒற்றை பனைமரமும் அதனை அழுத்தமாக பதிவு செய்திருக்கிறது. கஸ்தூரி, அஜாதிக்கா என்கிற பிரதானமான பாத்திரங்கள் வழியாகவும், துணைப் பெண்பாத்திரங்கள் வழியாகவும்...



சுந்தரம்- மாற்று இயக்கத்தினை சேர்ந்தவர். விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டு, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, "போராடத்தான் எமக்கு உரிமை இல்லை, இந்த மண்ணில் வாழ்வாவது உரிமை தாருங்கள்" என மடிப்பிச்சை கேட்டு வன்னியில் வாழும் ஒரு உயிர்.இறுதிப் போரில் இலங்கை இராணுவத்தின் விமானக் குண்டுவீச்சில் நிறைமாதக் கர்ப்பிணியான தனது நேசமிகு மனைவியை பலி கொடுத்தவர்.

கஸ்தூரி - மலையக வம்சாவளியைச் சேர்ந்த ஒரு நிலமற்ற ஏழைத்தொழிலாளியின் மகள். விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்த காரணத்தினால் இலங்கை இராணுவத்தினால் முழுக் குடும்பமும் அழிக்கப்பட்ட ஒரு முன்னாள் போராளி. சுந்தரம் கைது செய்யப்பட்ட போது அவரை விசாரித்த பிரிவில் இருந்தவர்.இறுதிக் கட்டப் போரில் சயனைட் அடித்து தன்னை மாய்க்க முடிவெடுக்கும் போது, சுந்தரத்தின் வேண்டுதலின் பேரில் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்து , வன்னிக்குள் நெருக்கடிமிகு வாழ்வை எதிர் கொள்பவர்.

அஜாதிக்கா - போரில் தனது குடும்பத்தினை தொலைத்து அனாதையாக நிற்கின்ற , மனவடு சுமந்த ஒரு பிஞ்சுக் குழந்தை. தனது சோகத்தினையும் பாடுகளையும் வாய்பேச முடியாத நிலையில் புல்லாங்குழல் வழியாக காற்றோடு கலக்கும் துயரார்ந்த இசை.

மிகை உணர்ச்சியும், குறை அறிவும் இருந்தாலும் ஒரு பிரதியை படைக்க முடியும்தான். ஆனால் அது வாழ்வை ஆரத் தழுவி மேலுக்கு வராது. சில கோசங்களால் சில நாட்கள் அது வாழும். செயற்கையான முன்னெடுப்புகள் காலத்தின் முன் புஷ்வாணமாகிவிடும். நிதானமும் தெளிந்த அரசியல்-வர்க்க- இன விடுதலைப் பார்வைகளும் தேடலும்தான் இப்படத்தில் புதியவனின் பலம்.

சுந்தரம் ஈற்றில் படுகொலை செய்யப்பட்டுத்தான் விட்டான். ஆனால் அது வரலாற்றில் மீண்டுமொரு தடவை வேறு வேறு தரப்புகள் ஒன்றாக இணைந்து நின்றபோது - "அண்ணை என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், எனக்கு வேறு வழி இல்லை"என கூடப்படுத்து சுட்டுக் கொல்லும் காட்சியும் தன்னிலை வாக்குமூலமும் நம்மை உலுப்புகிறது.

ஓ... கஸ்தூரி... அஜாதிக்கா நீங்கள் என்னதான் செய்வீர்கள்... இப்படியான மனிதர்களிடையே ?
இதில் யார் ஒற்றைப் பனை மரம்?
தனி மனிதர்களா? ஒட்டு மொத்த தமிழ் சமூகமா? அல்லது மொத்த சமூகத்திற்குள் வாழ வழியின்றி அல்லாடும் ஏழை மக்களா? சாதியத்தால் ஒடுக்கப்படும் மனிதர்களா? கொடிய போரினால் கைவிடப்பட்டு, இன்னும் தமது வாழ்வை இந்த அகாலத்திலிருந்து மீட்டெடுக்கமுடியாது நாளும் பொழுதும் செத்து வாழும் மனிதர்களா? கைவிடப்பட்டு நிர்க்கதிக் குள்ளாகியுள்ள முன்னாள் போராளிகளா?
இலங்கை இராணுவத்தின் சித்திரவதைகளை, அச்சுறுத்தலை எதிர் கொண்டும், சொந்த சமூகத்தின் அடக்குமுறைகளை எதிர்த்துக் கொண்டும் இறுதிவரை சமூக மாற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்து நின்ற தோழர் சுந்தரத்திற்கு புரட்சிகர அஞ்சலி, தோழர் புதியவனுடன் இப்படத்தில் உழைத்த அனைத்து கலைஞர்களுக்கும் தோழமையுடன் வாழ்த்துக்கள்.

'மண்' படம் தந்த புதியவன், 'ஒற்றைப் பனை மரம்' படத்தில் பாய்ச்சலை நிகழ்த்தி உள்ளார். இந்த இடத்தில் அவரது 'யாவும் வசப்படும்' படத்தினை ஒரு துர்க்கனவு எனக் கொள்வோம்.

●

# ஈழத்துக் குறும்படங்கள்



## அம்ஷன் குமார்


திரைப்பட, ஆவணப்பட இயக்குநர்


**த**மிழ்ப் படம் என்றால் அது தமிழ்நாட்டுக் கதைகளை வைத்து தமிழ் நாட்டில் எடுத்தால் தான் சிறப்பாக இருக்கும் என்று கருதும் ஈழத்தமிழர்கள் இன்றும் நம்மிடையே உள்ளனர். இரு வருடங்களுக்கு முன்னர் ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து வாழும் ஒருவர் அம்மாதிரியான எண்ணத்துடன் என்னை அணுகினார். தான் எடுக்கவிருக்கும் படத்திற்கு சென்னையிலுள்ள நட்சத்திரங்களை நடிக்க வைக்க வேண்டும் என்றும் ஆர்வம் கொண்டிருந்தார். "உங்களுடைய மக்களின் கதைகளை எடுங்கள். அவை இன்னும் சொல்லப்படாதவை. உலகம் அவற்றிலிருந்து தெரிந்து கொள்ள நிறைய இருக்கிறது" என்று நான் கூறினேன். அதற்கு அவர் கூறிய பதில்: எங்களுடைய மக்களிடம் சினிமாவிற்கு ஏற்ற கதைகள் இல்லை. அதற்கு மேல் அவரிடம் பேசிப் பயனில்லை என்று விட்டு விட்டேன். ஆனால் அவர் அவ்வாறு நினைத்ததற்கு காரணம் தமிழகத் தமிழ் படங்களுக்கப்பால் சினிமா என்கிற ஒன்றை அவரால் சிந்திக்க முடியவில்லை என்பதுதான். ஈழத்து தமிழ் சினிமா இன்னும் அரிச்சுவடி கட்டத்திலேயே இருக்கிறது என்று பாலு மகேந்திரா ஒரு முறை கூறினார். அப்போது அவர் தமிழ் நாட்டின் முக்கிய இயக்குநர்களில் ஒருவராக அறியப்பட்டிருந்தார். ஈழ சினிமாவை விமர்சித்தாரேயொழிய ஈழத்தமிழரான அவரும் தமிழ் நாட்டில் தமிழ்க் கதைகளை வைத்துதான் இறுதிவரை படம் எடுத்துக் கொண்டிருந்தார். தமிழ் நாட்டு வணிக சினிமாவின் தாக்கம் ஈழத் தமிழ் சினிமாவில் சொல்லொணாத வகையில் இருந்தது. இன்றும் கூட வணிகத் தமிழ் சினிமாவைத் தான் ஈழத்தமிழர்கள் பெருமளவில் நுகர்கின்றனர். ஆனால் நம்பிக்கையூட்டும் விதத்தில் தனக்கென தனித்தடம் பதிக்கும் புதிய ஈழசினிமா சமீப காலங்களில் உருவாகியுள்ளது. இதற்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தவை ஈழக்குறும்படங்கள் தாம்.

செலுலாய்டை சினிமா கச்சாப் பொருளாகக் கொண்டிருந்தவரை தமிழீழ சினிமா தனி அடையாளம் பெறவில்லை. காரணம் சினிமா இன்டஸ்ட்ரி என்று சொல்லத்தக்க - அதற்கு தேவையான உட்கட்டமைப்புகள் இலங்கையில் உருவாகவில்லை. டிஜிடல் சாதனங்கள் வந்தபிறகு படமெடுப்பதற்கான எளிய நடைமுறைகள் அறிமுகமாயின. சினிமாவில் நுழைவதற்கு காத்திருந்த இளைஞர்கள் இந்த சந்தர்ப்பத்தை உடனேயே பயன் படுத்திக்கொண்டனர். தமிழக சினிமாவின் தாக்கத்திலிருந்தும் அவர்கள் விடுதலை பெற்றனர். வணிக எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயங்கள் இல்லை என்பதால் சுதந்திரமாக படங்களை எடுக்கத் துவங்கினர். தங்களது பொருளாதாரத்

திற்கு பொருந்திவரும் குறும்படங்களை அவர்கள் தேர்ந்து கொண்டதும் அதன்பால் நிகழ்ந்தது. ஈழத்தில் மட்டுமன்றி அவர்கள் எங்கெல்லாம் புலம் பெயர்ந்தார்களோ அங்கெல்லாம் அங்குள்ள வசதிகளைப் பயன்படுத்தி படங்களை எடுக்கத் துவங்கினர். தமிழகத்திலும் அதே சமயத்தில் குறும்பட இயக்கம் தோன்றியது. இரண்டிற்கும் ஒப்பீட்டளவில் பல ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உள்ளன. தமிழ் நாட்டில் தமிழ்ப் படங்கள் தொட்டிராத பல பாடுபொருட்களை தமிழ்க் குறும் படங்கள் எடுத்தாண்டதைப் போலவே ஈழத்தவர்களின் குறும்படங்களும் ஈழசினிமா கண்டிராத புதுமைகளைப் படைத்தன. நடிகர்கள், ஒளிப்பதிவாளர்கள், படத்தொகுப்பாளர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோர் புதிய தலைமுறை சார்ந்த புதுமுக வரவுகள் ஆவர். ஈழத்தவர்களின் உள்நாட்டுப்போர் அகதி முகாம் வாழ்க்கை, புலம்பெயர்தல் போன்ற பல இருத்தலியல் பிரச்சனைகள் இடம்பெற்ற ஈழத்துக் குறும்படங்கள் மிகவும் வித்தியாசமாக உள்ளன. முழுநீளப் படங்கள், ஆவணப் படங்கள் ஆகியவையும் அங்கு தயாராகின்றன. கனடாவில் வாழும் லெனின் சிவத்தின் படங்கள் சர்வதேசப் படவிழாக்களில் இடம் பெற்றுள்ளன. பிரான்சில் வாழும் ஈழத் தமிழ் எழுத்தாளர் ஷோபாசக்தி ஒரு நடிகராக சினிமாவில் பிரவேசித்து உலகின் கவனத்தைப் பெற்றுள்ளார். அவர் நடித்த தீபன் திரைப்படம் கான் பட விழாவில் சிறந்த படத்திற்கான விருதினைப் பெற்றது. ஜூட் ரட்னத்தின் Demons in Paradise கான் விழாவில் திரையிடப்பட்ட முதல் தமிழ் ஆவணப்படம் என்னும் சிறப்பினைப் பெற்றுள்ளது. ஈழத்துக் கலைஞர்களிடமிருந்து பல நல்ல படங்கள் தயாராகி வெளிவருகின்ற சூழ்நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. இதற்கெல்லாம் முன்னோடி அங்கு தயாரான குறும் படங்கள்தாம். வித்தியாசமாயும் தன்னிச்சையாயும் படங்களைத் தயாரிக்க முடியும் என்கிற உற்சாகத்தையும் தன்னம்பிக்கையையும் குறும்படக் கலைஞர்கள்தாம் அளித்தனர். தொடர்ந்து குறும்படங்கள் தொழில் நேர்த்தியுடன் எடுக்கப்பட்டு வருகின்றன. லண்டனில் ஆண்டு தோறும் நடைபெறும் விம்பம் குறும்படத் திரைப்பட விழா, அவற்றை திரையிட்டு விருதுகள் வழங்குவதில் முன்னோடியாக செயல்பட்டு வருகிறது. 2004 ஆம் ஆண்டு ஓவியர் கே.கே.ராஜா, ஒளிப்படக் கலைஞர் எஸ். சாந்தகுணம், நரேஷ் (போஸ்) ஆகியோரால் விம்பம் துவங்கப்பட்டது. இதுவரை பத்து சர்வதேச தமிழ்க் குறுந்திரைப்பட விழாக்கள், இலக்கிய கருத்தரங்குகள், திரைப்பட பயிலரங்கங்கள், ஒளிப்பட கண்காட்சிகள், ஓவியப் போட்டிகள் என்றெல்லாம் விம்பத்தின் செயல்பாடுகள் பொருத்தமாயும் வியக்கத்தக்க வகையிலும் விரிவடைந்துள்ளன. விம்பம் குழுவினர் அவ்விழாவினை ஆண்டு தோறும் தொடர்ந்து நடத்துகிறார்கள்.






புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் குறும்படங்கள் அவற்றில் திரையிடப்பட்டு விருதுகளைப்பெற்று உலகினரின் கவனத்தை ஈர்க்கின்றன. அவற்றில் தங்கள் குறும் படங்களைத் திரையிட்ட சதா பிரணவன், மன்மதன் பாஸ்கி, பிரேம் கதிர், மதி சுதா, ஞானதாஸ் காசிநாதர், புதியவன் ராசையா ஆகியோர் முழுநீளப் பட இயக்குநர்களாக உருவாகியிருப்பதாக அறிகிறேன்.

2010 ஆம் ஆண்டு விம்பம் நடத்திய ஆறாவது குறும்படத் திரைப்பட விழாவில் நடுவர்களில் ஒருவராக பணிபுரியும் அரிய சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. அந்தப் படங்களை எடுத்துச் சென்று தமிழகத்தில் திரையிட ஏற்பாடுகள் செய்தேன். தமிழ்நாட்டு ரசிகர்களுக்கு அவை புதிய அனுபவத்தை கொடுத்தன. இந்த ஆண்டும் லண்டனில் நடைபெறும் விம்பம் குறும்பட விழாவை நடத்தும் அதன் அமைப்பாளர்கள், தங்கள் படைப்புகளை அனுப்பி அதில் கலந்து கொள்ளும் கலைஞர்கள் ஆகியோருக்கு எனது அன்பான வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

●

# கற்பித சமூகத்தை உருவாக்கும் விம்பம்

ரதன்

**வி**ம்பம் திரைப்பட விழாவிற்கு எமது வாழ்த்துக்கள். கடந்த 15 வருடங்களாக விம்பம் தொடர்ச்சியாக குறும்பட விழாவினை லண்டனில் நடாத்தி வருகின்றது. கடந்த 15 வருடங்களில் விம்பம் உட்பட உலகளவில் நடைபெற்று வரும் குறும்பட விழாக்கள் பல புதிய படைப்பாளிகளை உலக தமிழ்த் திரையுலகிற்கு வெளிப்படுத்தியுள்ளன. புலம் பெயர் குறும்படங்களினூடாக, புலம் பெயர் வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை, இது வரை வெளிவந்த குறும்படங்களினூடாக காணலாம். கவிதை, நாவல், சிறுகதை போன்ற படைப்புக்கள் கூட, புலம் பெயர் வாழ்வின் முழுமையான பரிமாணத்தை வெளிப்படுத்த தவறிவிட்டன. குறும் படங்கள் இக் குறையை நிவர்த்தி செய்துள்ளன. முழு நீளத் திரைப்படங்கள் ஆங்காங்கே புலம் பெயர் வாழ்வை வெளிப்படுத்தின. குறும் படங்கள் கலாச்சார மீளாக்கத்தில், புலம் பெயர் மக்களின் தளம் குறித்தும், தேசியம், அரசு, பொருளாதாரம், நிறவாதம், சாதியம், ஒடுக்குமுறை, பெண்ணிய ஒடுக்குமுறை

போன்றவற்றை பற்றிய சுதந்திரமான கருத்துக்களை முன்வைத்ததுடன், மாற்றுக் கண்ணோட்டங்களையும் வெளிப்படுத்தியுள்ளன. மிகக் குறிப்பாக இவை ஒரு உரையாடல் வெளியை உருவாக்கியுள்ளன. இவை ஒரு மீள் விசாரணையை ஆரம்பித்துவைத்துள்ளன. அரசு, தேசியம் போன்றவற்றின் மேலாதிக்க கருத்தாக்கத்தை கட்டுடைத்துள்ளன.

இன்று மிகவும் கவனத்துக்குரிய முழு நீளப் படைப்பாளிகள், குறும்படங்களினூடாகவே கவனத்துக்கு வந்தார்கள். அண்மையில் ரொரன்ரோவில் திரையிடப்பட்ட, மிகவும் தரமான "சினம் கொள் திரைப்படத்தின் இயக்குனர் ரஞ்சிற் யோசப், பல நல்ல குறும்படங்களை இயக்கியுள்ளார். அதே போல் பல குறும்பட படைப்பாளிகள், இன்று தரமான முழு நீளக் குறும்படங்களை இயக்கி வருகின்றனர்.

குறும்படங்கள், முழு நீளத் திரைப்படங்களுக்கான ஒரு பயிற்சியாகவே கருதப்படுகின்றது. பல படைப்பாளிகளுக்கு குறும்படங்களுக்கும், முழு நீளத் திரைப்படத்துக்குமான வித்தியாசம் தெரியாது. ஒரு தடவை ஒரு படைப்பாளி தான் ஒரு முழு நீளத்திரைப்படத்தை இயக்கிக் கொண்டிருக்கின்றேன், அதிலிருந்து ஒரு காட்சியை வெட்டி உங்கள் குறும்பட விழாவிற்கு தருகின்றேன் எனக் கூறி என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தினார்.

இன்று குறும்படங்களின் வருகை குறைந்து வருகின்றது. போரின் பின்னர் இலங்கையில் குறும்படங்கள் வணிகமயமாகிவிட்டன. இந்திய மசாலாப் படங்களை பிரதியெடுத்து வெளிவருகின்றன. இவற்றையும் மீறி சில தரமான படங்கள் வெளிவருகின்றன. இந்தியாவில் தொலைக் காட்சி சேவைகள், குறும்படப் போட்டிகளை நடாத்துகின்றன. இதற்கு நடுவர்களாக வருபவர்கள், வணிக சினிமா இயக்குனர்கள். அவர்கள் குறும்படங்களின் பாணியை வணிக சினிமாமயப்படுத்துகின்றார்கள். உதாரணமாக நாளைய இயக்குனர் என்ற குறும்படப் போட்டி நிகழ்ச்சியை குறிப்பிடலாம்.

விம்பம் நடத்தும் புலம் பெயர் திரைப்படவிழாக்கள் ஒரு அடிப்படை விழாக்கள். இவற்றின் நோக்கமே, தரமான படைப்பாளிகளை அடையாளங் கண்டு, அவர்களை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்துவதாகும். பல தடைகள், வணிக நிகழ்ச்சிகளின் விளம்பரங்கள், பிரதியெடுத்தல்கள் போன்றவற்றையும் மீறி இவ் விழாக்கள் தொடர்ந்து தங்கள் தரத்தையும் விட்டுக் கொடுக்காமல் செயல்படுகின்றன. அவ் வகையில் விம்பமும் தனது நோக்கத்தையும், தரத்தையும் தொடர்ச்சியாக உயர்த்திக் கொண்டு செல்கின்றது.

விம்பம் தனது திரைப்பட விழாக்களினூடாக, சமூகத்தில் ஒரு கட்டுடைப்பை செய்து வருகின்றது. ஒரு உரையாடல் வெளியை உருவாக்கியுள்ளது. அதனூடாக பல கருத்தியல்கள் மீதான விசாரணை பொதுத் தளத்தில் நடைபெற வழிசெய்துள்ளது.

விம்பம் குறும்பட விழாவிற்கு வாழ்த்துக்கள்.

**ரதன்**
இயக்குனர்
சுயாதீன, கலை திரைப்பட மையம்
ரொரன்ரோ ஒன்ராறியோ
2019 - 04 - 07

## விம்பம் - 9ஆவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட படங்களின் விபரம்:

| | | | |
|---|---|---|---|
| 01. | பூக்களைக் கொய்யாதீர் | (21.40 min) | M. Baskar (France) |
| 02. | செருக்களம் | (15.00 min) | S. Sivaraj (Sri Lanka) |
| 03. | Border | (20.40 min) | T.Shamithan (Sri Lanka) |
| 04. | Your Destination | (02.55 min) | J. Sathis (France) |
| 05. | அறன் | (05.25 min) | Prem Kathir (London) |
| 06. | பந்து | (11.30 min) | Ma Thi Sutha (Sri Lanka) |
| 07. | Bilboquet | (10.00 min) | B. Surendran (London) |
| 08. | அறமுற்றுகை | (25.30 min) | Mayan Kanthan (Sri Lanka) |
| 09. | பாதுகை | (09.35 min) | Ma Thi Sutha (Sri Lanka) |
| 10. | சருகுவெளி | (12.00 min) | S. Pratheepan (Sri Lanka) |
| 11. | Cèrès (special screening) | (10.25 min) | Sathapranavan (France) |
| 12. | சனம் | (22.00 min) | Kamalakkannan (Tamil Nadu) |
| 13. | பிழை | (03.30 min) | S. Sabarivasan (Tamil Nadu) |
| 14. | To Let | (02.40 min) | K. J. Hashmi (Tamil Nadu) |

## 9ஆவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழாவில் விருதுபெற்றவர்கள்


BEST CHILD ARTIST
CHRISTYANTONY JANUSAN


BEST ACTRESS
NIGITHA REEGAN


BEST ACTOR
FRANCIS ULS COLIN
BORDER (SRI LANKA)


BEST SCRIPT
Ma Thi Sutha


BEST EDITOR
Pratheepan Selvaratnam


OVERALL BEST FILM
Panthu - Ma Thi Sutha


BEST FILM - INDIA
Sanam
Kamalakkannan (Sri Lankan)


BEST DIRECTOR
Pratheepan Selvaratnam


BEST CINEMATOGRAPHER
Sivalingan Sivaraj


BEST FILM - AUDIENCE VOTED
Border (Sri Lanka)
Theneswaran Shamithan

# விம்பம் குறுந்திரைப்படப் போட்டிகளில் விருதுபெற்றவர்கள்

## VIMBAM AWARD - 2004

- சிறந்த குறுந்திரைப்படம்
  The Addict (Canada)
- சிறந்த நெறியாளர்
  Suthan Mahalingam
  (The Addict - Canada)
- சிறந்த படத்தொகுப்பாளர்
  Rupan (Koppai- Canada)
- சிறந்த நடிகர்
  Suthan Mahalingam
  (The Addict - Canada)
- சிறந்த நடிகை
  Sumathy Rupan
  (Manushi - Canada)
- சிறந்த குழந்தை நட்சத்திரம்
  Prasanna
  (Mookkupeni - Sri Lanka)
- சிறந்த ஒளிப்பதிவாளர்
  Guna (Vilaasam - France)
- சிறந்த திரைப் பிரதி எழுத்தாளர்
  Gopinath (Cycle - Sri Lanka)
- சிறந்த திரைக்கதை
  S.Ragavan
  (Mookkupeni - Srilanka)

## VIMBAM AWARD -2005

- சிறந்த குறுந்திரைப்படம்
  Sri Lanka - Kitchan
  **India - Birthday**
  **Exile- Br(a)illiant – USA**
- சிறந்த நெறியாளர்
  K.Muthukumar (Birthday - India)
- சிறந்த படத் தொகுப்பாளர்
  Patric Pathmanathan – Canada)
- சிறந்த நடிகர்
  Master Delushanth Mohan
  (Kitchan- Sri Lanka)
- சிறந்த நடிகை
  Mrs S.Bhawani ( You 2 - Canada)
- சிறந்த ஒளிப்பதிவாளர்
  **Mr Panneer K. Selvam**
  **(Elamai – India)**

## VIMBAM AWARD - 2009

- சிறந்த குறுந்திரைப்படம்
  Exile - Still Life (London)
  Sri Lanka- The Body
- சிறந்த நெறியாளர்
  V.Anuja ( Saruku- France)
- சிறந்த படத்தொகுப்பாளர்
  S.Manohara ( Knive- Sri Lanka)
- சிறந்த நடிகர்
  Nelson Sivalingam
  (Still Life - London)
- சிறந்த நடிகை
  Buthini Dinusika
  (The Body - Sri Lanka)
- சிறந்த குழந்தை நட்சத்திரம்
  Francis Sanjika
  (The Body - Sri Lanka)

- சிறந்த ஒளிப்பதிவாளர்
  V.Janosan - (Saruku- France)
- சிறந்த திரைக்கதை
  Guvera & Nelson Sivalingam
  (Still Life- London)
- பார்வையாளர் தேர்வு
  சிறந்த குறுந் திரைப்படம்
  Pasi
  S.T.Imayavarampan - India

## VIMBAM AWARD - 2010

- சிறந்த குறுந்திரைப்படம்
  Exile – Ini Avaz (France)
  Sri Lanka- 100% Discount
  Overall - 3 Iravu 4 pagal
- சிறந்த நெறியாளர்
  I.V.Jana
  (3 Iravu 4 pagal - France)
- சிறந்த படத்தொகுப்பாளர்
  Pon. Ketharan
  (Kalaacharam- France)
- சிறந்த நடிகர்
  M.Baskar (3 Iravu 4 pagal - France)
- சிறந்த நடிகை
  Leesa Shonam
  (Nesam - Sri Lanka)
- சிறந்த குழந்தை நட்சத்திரம்
  A. Ajanthan
  (3 Iravu 4 pagal - France)
- சிறந்த ஒளிப்பதிவாளர்
  Sukir (Ammanam - France)
- சிறந்த திரைக்கதை
  Sri Thayalan
  (Karuppu Vellai - France)
- பார்வையாளர் தேர்வு
  சிறந்த குறுந் திரைப்படம்
  3 Iravu 4 pagal -France

## VIMBAM AWARD - 2012

- சிறந்த குறுந்திரைப்படம்
  Exile - Nagal - France
  Sri Lanka- Adivaanam
  India -Thamil
- சிறந்த நெறியாளர்
  Pon Thaya - (Nagal - France)
- சிறந்த படத்தொகுப்பாளர்
  Desuban
  (Thinap Payanam - France)
- சிறந்த நடிகர்
  Sathapranavan
  (Poralikku Itta Peyar) France
- சிறந்த நடிகை
  Pon Thaya -(Nagal - France)
- சிறந்த குழந்தை
  நட்சத்திரம்
  Jekan Harish
  (Adivaanam - Sri Lanka)
- சிறந்த ஒளிப்பதிவாளர்
  Pon Ketharan
  (Semmalaiyan - France)
- சிறந்த திரைக்கதை
  Pon Thaya (Nagal -France)

## VIMBAM AWARD - 2015

- சிறந்த குறுந் திரைப்படம்
  Exile – Adangaa mathavi -
  France
  SriLanka – Silent Tears
  India – Bangala naai
- சிறந்த நெறியாளர்
  Sujith G (Maseelan -
  France)
- சிறந்த படத்தொகுப்பாளர்
  Sangar Thevan
  (Adangaa mathavi - France)
- சிறந்த நடிகர்
  Kesavan Ramasamy
  (Setha pin- France)

- சிறந்த நடிகை
  Mariyant Pirabakaran
  (Adangaa mathavi - France)
- சிறந்த குழந்தை நட்சத்திரம்
  Pina Asalya Srikumara
  (Silent Tears- Sri Lanka)
- சிறந்த ஒளிப்பதிவாளர்
  Piriyantha maalavike
  (Silent Tears- Sri Lanka )
- சிறந்த திரைக்கதை
  S.M. Baskar
  (Adangaa mathavi -France)
- பார்வையாளர் தேர்வு
  சிறந்த குறுந் திரைப்படம்
  Eathilikal - (Prem Kathir- UK)
  Adangaa mathavi - France

---

**தொகுப்பு: M. Fauzer**

# *Acknowledgment*


## Our Special thanks go to:

Professor Swarnavel Easwaran
Film Director Amshan Kumar

Mrs. Yoga Perinpanathan, Mrs. S.Yogarajah
Dr. Mathy Baheerathan, Dr. A. Baheerathan
Dr. K. Sugumar,
Mr Manickam Sathiamoorthy
Mr. O. Kokularupan

Mr Rathan (IAFS - Canada)
Mr Dilip Kumar (Thaiveedu - Canada

## Our Sponsors:

Soma & Co Solicitors, Jeya & Co. Solicitors
Select - Estates & Lettings

## Media Sponsors:

Thaiveedu (Canada), Vetty Mani (Germany)
Puthinam (London), Arangan (Sri



VIMBAM, 4 Burges Road,
London E6 2BH, UK
Tel: +44) 07736 908 421, (+7883 573 337
E-mail: kkrajah2012@gmail.com

விம்பம் – லண்டன் நடாத்தும் ஓவியப் பரிசுப் போட்டியும் கண்காட்சியும்



இலங்கைத் தமிழர்களின் ஓவியக்கலை மரபில்
வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தியவரும்
நவீன ஓவியக்கலையின் முன்னோடியுமான

# ஓவியர் அ. மாற்கு

ஞாபகார்த்த

## ஓவியப் பரிசுப் போட்டியும் கண்காட்சியும்

### போட்டி நிபந்தனைகள்:

1. இலங்கையில் வசிக்கும் 6 -15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான போட்டி.
2. 21.0 cm X 29.7 cm அல்லது 29.7 cm X 42.0 cm அளவிலான காகிதம் அல்லது அட்டையில் எந்தவகையான ஊடகங்களையும் பாவித்து வரையலாம்.
3. A. எங்கள் வாழ்வு (Our Life), அல்லது B. எனது கனவு (My Dream) ஆகிய பொருள்பட ஓவியங்கள் வரையப்படவேண்டும்.
4. ஒருவர் ஒன்று அல்லது இரண்டு படைப்புகளையும் அனுப்பிவைக்கலாம்.
5. ஓவியத்தின் பின்புறத்தில் படைப்பாளியின் ஒளிப்படம் ஒட்டப்பட்டு, பாடசாலை அதிபர் அல்லது கிராம சேவகரால் படைப்பாளியின் பெயர், வயது ஆகியன உறுதிப்படுத்தப்பட்டு கையொப்பமிட்டிருக்க வேண்டும்.
6. விண்ணப்பங்கள் 30. 04. 2019 திகதிக்கு முன்பாக கீழ்க்காணும் ஏதாவதொரு முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் அல்லது கையளிக்கப்படவேண்டும்.
7. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.

யாழ்ப்பாணம்: Noolaham Faundation, 185, Aadiyapatham Road, Kokkuvil, Jaffna. 0773 747 828
மட்டக்களப்பு: P. Seevagan, Arangam Office, 227, Bar Road, Batticaloa - Tel: 0713 999 091
கிளிநொச்சி: S. Karunakaran, 754, Kanagarasa Thirunagar North, Kilinochchi - TeL: 0770 871 681
வத்தளை: Pramila Pradeepan, 142/17, Don Bosco Mawatha, Palliyawatha, Wattala - Tel: 0771 320 760
பதுளை: K. Thirulolgashankar, Principal, Bd/Saraswathy National College, Mahiyangana Road, Badulla - Tel: 0716 997 644
மாத்தறை: Chandani Samarawickrama, Sipsara Education Center, 33, Issadeen Town, Matara - Tel: 0715 784 673

லண்டன் தொடர்புகளுக்கு: K. K. Rajah +(44) 07736 908 421, kkrajah2012@gmail.com

வெற்றிபெறும் போட்டியாளருக்கு அவரவர் திறமைகளுக்கேற்ப
**Rs. 2,000,00**
ரூ.20,000, ரூ.15,000, ரூ.10,000, ரூ.5,000 என
18 பரிசில்கள் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படவுள்ளன.

வெற்றிமணி (ஜேர்மனி, இலங்கை) கனடா தாய்வீடு இலங்கை

VIMBAM Estd:2004

ஜூலை 2019 இல் ஓவியக் கண்காட்சி நடைபெறவிருக்கும் இடங்கள்: கிளிநொச்சி, யாழ்ப்பாணம், கொழும்பு

# Creation & Solutions

317 First Floor, High Street North,
Eastham, E12 6SL, London, UK

## Tamil Books & Publication



Sri Lankan, Indian & Diaspora's Tamil & English Books Distributing

Publishing Literacy, Socio-Political & Economic Writings

## Designing & Printing

Invitations | Banners | Flyers | Brochures | Stickers | Leaflets | Menu Cards | Receipt Books

Signs | Business Cards | Catalogues | Posters | Letterheads | Rubber Stamps

**Logos | Layouts | Typesetting**

**Souvenirs | Magazines | Books**

Mob: 07817262980
Email: eathuvarai@gmail.com
www.eathuvarai.net

Web: www aeduuk.org
E-mail: admin@aeduuk.org

AEDU



எழுத்தறிவிப்போம்
ஏக்கம் தவிர்ப்போம்
வளமான வாழ்வளிப்போம்

UK charity N°: 1142552

Uplifting the Lives of Underprivileged Children







விம்பம் - 9ஆவது சர்வதேச தமிழ் குறுந் திரைப்பட விழாவில்...


படங்கள்: சாந்தகுணம்












**Best Child Artist**
**Kalaiyoli Muththaiyapillai Memorial Award**
Sponsored by
**Miss. Thendral & Thenuka Nithiyanandan**




**Best Film - Sri Lanka**
**Mrs. N. Sivagengai Memorial Award**
Sponsored by
Mr. N.Sabesan



**Overall Best Film**
**Mr. S. Perinbanathan Memorial Award**
Sponsored by
VIMBAM



**Best Editor**
**Mrs Mangayarkarasi Amirthalingam Memorial Award**
Sponsored by
Dr. A. Baheerathan



**Best Director**
**Mr. K. Kandasamy Memorial Award**
Sponsored by
Dr. K Sugumar



**Best Actress**
**Mrs. Sashikala Sathiyamoorthy Memorial Award**
Sponsored by
**Mr. M. Sathiyamoorthy**




**Best Cameraman**
**Mr.Sellaththurai Ongaranathan**
Sponsored by
**Mr. O.Kokularupan**



**Best Script writer**
**'Manithan' Anthiresupillai Wimalathasan Memorial Award**
Sponsored by
a well wisher




**Best Actor**
**Mr. S. Yogarajah Memorial Award**
Sponsored by
Mrs. S.Yogarajah



**Best Film - Exile**
**Mr. N. S. Kandaiah**
Sponsored by
Mr. P. Rajanayagam (Tamil Times)


From 5yrs - 12 yrs
10-20 minutes practice everyday
Weekly 2 hour Teaching & Learning sessions
Structured syllabus for every level - No repetition
Each level completes in 12 weeks
Simple level assessments
The pioneer and leading organisation in Abacus Mental Arithmetic education
This unique educational approach, improves students from their very basic knowledge of numbers to the mastery of mental arithmetic.
Your Child's Intelligence
Developing the potential of the LEFT & RIGHT brain to unleash y our Child's Intelligence
LEFT Brain
Logic
Analysis
Sequencing
Language
Computation
RIGHT Brain
Creativity
Imagination
Holistic Thinking
Non-Verbal
Visualisation
1
2
3
UCMAS
Program enhances:
Image memory • Listening skills
Concentration • Self confidence • Speed & accuracy
Centre 1: Select Office, E12 6SA Centre 2: Beal High School, IG4 5LP
S Select Academy
07776 060 003
admin@selectacademy.eu


Chithiram
presents
ஜூன் 2019, லண்டன் திரை அரங்கில்
Kattumaram
(catamaran)
Written & Directed
by
Swarnavel Eswaran
Karthik Muthukumar | P.Bharani Dharan | Arun


♫ மனுசங்கடா.. நாங்க மனுசங்கடா ♫
இது மானுடத்தின் உரிமைக் குரல் !!
ஜூலை
27
2019
சனி மாலை
5.00 மணி
Trinity Centre - London E12 6SG
மனுசங்கடா
திரையிடலும் கலந்துரையாடலும்
நெறியாளர் அம்ஷன்குமார் கலந்து சிறப்பிக்கிறார்